# செம்பதாகை

மலர்: 1
இதழ்: 4
சித்திரை 1979
விலை சதம்: 50

புரட்சிகர வெகுஜன ஏடு


# வடபகுதிக்கு விசேஷசட்டமா?

வட பகுதிக்கென விசேஷ சட்டம் கொண்டுவரப் போவதாகத் "தார்மீகத் தலைவர்" ஜே. ஆர். ஜயவர்த்தன எச்சரிக்கை செய்துள்ளார். அவர் நினைப்பது போல் சட்டங்களால் பிரச்சினைகளைத் தீர்த்து விட முடியாது. அதற்குப் பதிலாக சட்டம் கொண்டு வருவதற்கு காரணமாக எழுந்துள்ள பிரச்சினைகளை ஓரளவு தானும் தீர்ப்பதற்கு முயற்சிகள் மேற் கொள்ளல் வேண்டும்.

வட பகுதியில் நடை பெற்று வரும் வங்கிக் கொள்ளைகள்- கொலைகள் போன்றவற்றைச் சாட்டாக வைத்துக் கொண்டு அப்பகுதிக்கென விசேஷ சட்டம் கொண்டு வருவது பற்றி அரசாங்க மட்டத்தில் தீவிரமாக ஆலோசிக்கப்படுவதாக கூறப்படுகின்றது. அப்படியான ஒரு விசேஷ சட்டம் ஒரு பகுதிக்கு மட்டும் கொண்டுவரப்படுவது அப் பகுதி மக்களை விசேஷ பழிவாங்கலுக்கு ஆளாக்குவதாகவே அமையும். வட பகுதி மக்கள் ஏற்கனவே இன அடக்குமுறைகளின் பாதிப்பால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள். ஏற்கனவே நடைமுறைக்கு வந்த சட்டங்களால் தமிழ் மக்கள் குறிப்பாக வட பகுதி மக்கள் பாதிப்படைந்துள்ளனர். ஏனெனில் எந்தச் சட்டங்களையும் அமுல்படுத்துபவர்கள் ஆயுதப்படையினரேயாவர். இவர்கள் சட்டத்தை அமுல்படுத்தும் போது ஒன்றுமறியாத மக்களைத்தான் இம்சைப்படுத்துவார்கள். இது இன்றைய நடை முறையாகும்.

வட பகுதியில் கொள்ளைகளும் கொலைகளும் நடை பெறுகின்றன என்பது உண்மையே, ஆனால் இதில் வட பகுதி மக்கள் அனைவரும் ஈடுபடவுமில்லை. அதற்கு ஆதரவு கொடுப்பவர்களும் அல்லர். ஆனால் பாதிக்கப்படுபவர்கள் சாதாரண மக்களாகவே உள்ளனர். குறிப்பாக வீதிகளிலும் பொது இடங்களிலும் நடமாடும் வாலிபர்கள் ஆயுதப்படையினரால் மிகக் கேவலமாகக் நடத்தப்படுகின்றனர். தமிழில் ஒரு பழமொழி உண்டு "யாரோ இளநீர் குடிக்க யாரோ கோம்பை சுமந்தார்களாம்" என்பது போலவே வட பகுதியில் இளைஞர்கள் சகலரும் நடத்தப்படுகின்றனர்.

கொள்ளைச் சம்பவங்களும்- கொலைச் சம்பவங்களும் வட பகுதியில் மட்டும் நடை பெறவில்லை. நாடு முழுவதிலும் நாளாந்தம் நடை பெறுகின்றன. ஆனால் வட பகுதியில் நடை பெறும் சம்பவங்கள் அரசியல்பின்னணி கொண்டது என்று அரசாங்கத்தின் உயர் தலைவர்கள் பேசி வருகின்றார்கள். அதில் எவ்வளவு உண்மை இருக்கின்றது என்பது பலத்த கேள்விக் குறியாகவே உள்ளது. ஏனெனில் அரசாங்கத்தின் சட்டங்களை நேரடியாக வட பகுதியில் இருந்து நடைமுறைப்படுத்தும் ஆயுதப் படைகளின் தலைவர்கள் அண்மையில் வெளியிட்ட கருத்துக்களில்

(4-ம் பக்கம் பார்க்க)

# யு. என். பி.த் தலைகள் தம்முள் மோதுகின்றன!

கடந்த தேர்தல் மேடைகளில் நிறைவேற்ற முடியாத வெற்று வாக்குறுதிகளை மக்கள் முன் வைத்த போது ஐக்கியமான தலைகள் போல் காட்சி கொடுத்த யூ. என். பீத் தலைகள் இன்று முட்டி மோதிக் கொள்ளும் நிலைக்கு வந்துள்ளன.

மக்களை ஏமாற்றி அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுப்பதில் யூ. என். பி. தலைவர்கள் ஒற்றுமையாகச் செயல் பட்டனர். அதே போல் கடந்த அரசாங்கத்தின் தலைவர்களைத் திட்டுவதிலும் விமர்சனம் செய்வதிலும் ஒற்றுமையாக இருந்தனர். ஆனால் இன்றோ தாம் உருவாக்கிய திட்டங்களை நடைமுறைப்படுத்த முயலும் போது ஒருவரோடு ஒருவர் முட்டி மோதிக் கொள்கின்றனர். பதவிகளினால் யார் பெரிது யார் சிறிது என்பதால் மட்டுமன்றி தமது தலைவர் ஜே. ஆருக்கு அடுத்த நிலையில் உள்ளவர் யார் என்பதிலும் யூ. என். பி தலைவர்கள் மத்தியில் பெரும் எரிச்சலும் புகைச்சலும் எழுந்துள்ளன. ஜே. ஆர். ஜயவர்த்தன ஜனாதிபதி பதவி ஏற்றுக் கொண்டதும் பிரதமர் பதவியில் பெரும் இழுபறி நடைபெற்றதாகவும் ஜே. ஆர். தலையிட்டு பிரேமதாசா அவர்களை பிரதமராக நியமித்தார் என்றும் பேசப்பட்டது. பிரேமதாசா பிரதமராக இருந்தாலும் அவர் மந்திரி சபையை எவ்வகையிலும் கட்டுப்படுத்த முடியாதவராகவும், மந்திரிகளின் பெரும் பகுதியின் பெயரளவிற்காவது பிரதமரின் சொல்லுக்கு மதிப்பு கொடுப்பது இல்லை என்றும் யூ. என். பி வட்டாரங்களில் பேச்சு அடிபடுகின்றது. இது உண்மையாய் இருக்கும் என்பதற்கு ஆதாரமாய் மந்திரி சபைக் கூட்டங்களுக்கு ஜனாதிபதியே தலைமை தாங்கி வருவது சுட்டிக் காட்டப்படுகின்றது. அதே போல் ஜனாதிபதிக்கு அடுத்த நிலை அனேகமாக ராஜாங்க மந்திரியாக உள்ள ஆனந்ததிஸ்ஸடிஅல்விஸ் அவர்களே வகித்து வருவதாகவும் அவருக்கும் பிரதமர் பிரேமதாசாவிற்கும் எட்டாம் பொருத்தமாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது, சபாநாயகராக இருந்த இவர் ராஜாங்க மந்திரி ஆக்கப்பட்டதும், இன்று ஜனாதிபதியின் பெரும்பாலான வேலைகளுக்கு அவர் பொறுப்பாக இருந்து வருவதும் பிரதமர் பதவி வெறும் பெயரளவிலானதொன்று என்பதையே எடுத்துக் காட்டுவதாகவும் கூறப்படுகின்றது. இதனால் பிரதமர் ஆர். பிரேமதாசாவும் அவரைச் சார்ந்தவர்களும் ஒரு புறமாகவும் ஏனைய தலைகள் மற்றொரு புறமாகவும் வரிந்து கட்டிக் கொண்டு மோதலுக்கு தயாராகி உள்ளதாகவும் யூ என் பியோடு நெருங்கிய வட்டாரங்களில் இருந்து பேச்சு அடிபடுகின்றது.

இவ்வாறு முட்டி மோதிக் கொள்ளும் யூ. என். பீத் தலைகளுக்கிடையில் ஜே. ஆர் ஜயவர்த்தன தலையணைகளை வைத்து தற்காலிகமாகவேனும் தலைகளுக்கிடையிலான மோதல்களைத் தடுக்க முயலுகின்றாராம். எவ்வாறு தான் முயன்றாலும் யூ. என். பி தலைகளுக்கிடையிலான மோதல்கள் தவிர்க்க முடியாதவையே யாகும். மக்களை ஏமாற்றுவதில் ஒற்றுமையாக இருந்த இத் தலைவர்கள் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத இவ்வேளை தம்

(4-பக்கம் பார்க்க)

மாசேதுங் சிந்தனையை முன்னெடுத்து

## புரட்சீகர மேதினத்தில் அணிதிரள்வோம்!

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது)

# கம்பூச்சியாவின் நான்காவது தேசியதினம்

இம் மாதம் பதினேழாம் திகதி கம்பூச்சிய மக்கள் விடுதலை பெற்ற நான்காவது தேசிய தினமாகும். 1970ம் ஆண்டு மார்ச் மாதத்தில் இளவரசர் சிஹானூக் தலைமையில்உள்ள அரசாங்கத்தை நொன் நோல் தலைமையிலான ராணுவம் சதி மூலம் கவிழ்த்தது இச் சதிக்கு பக்கபலமாக இருந்து வழிகாட்டியது அமெரிக்க ஏகாதிபத்தியமே.

இவ் ராணுவச் சதி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து கம்போடிய மக்கள் இருண்ட சர்வாதிகாரத்தின் கீழும் அமெரிக்க ஆக்கிரமிப்புப்படைகளின் அட்டகாசத்தின் கீழும் கொண்டுவரப்பட்டனர். ராணுவச் சதி ஏற்பட்டபோது நாட்டிற்கு வெளியே இருந்த இளவரசர் சிஹானூக் சீனாவிற்கு சென்று பீக்கிங்கில் தனது அரசாங்கத்தை அமைத்துச் செயல்பட்டார். அவ் அரசாங்கத்தை உலகின் பல நாடுகள் அங்கீகரித்திருந்தன.

அதே வேளை நொன் நோல் பொம்மை ஆட்சிக்கு எதிராகவும், அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகவும் கம்பூச்சியாவில் பெரும் மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் கிளர்ந்தெழுந்தனர். ஏற்கனவே கிராமங்களில் காலூன்றி தலைமறைவுக் கட்சியாக இயங்கி வந்த கம்போடியக் கம்யூனிஸ்ட் கட்சி விடுதலைப் போராட்டத்திற்கு உறுதியான தலைமையைக் கொடுத்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் தேசிய விடுதலைக்கான பரந்த ஐக்கிய முன்னணியையும், புரட்சிகர மக்கள் படையையும் கட்டி எழுப்பி கிராமங்களில் தங்கி நின்று நகரங்களை விடுதலை செய்யும் மக்கள் யுத்தப் பாதையில் ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிக்கும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கம்போச்சியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சரியான ஐக்கிய முன்னணிக் கொள்கையாலும், சரியான மக்கள் யுத்த தந்திரோபாயத்தாலும், 1975ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கம்போடிய மக்கள் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களையும், அவர்களது கைப் பொம்மையான நொன் நோல் கும்பலையும் தோற்கடித்து தமது விடுதலையை உலகிற்குப் பிரகடனம் செய்தனர். கம்போடிய மக்கள் ஐந்து வருடங்கள் ஒரு மாத காலத்தில் தமது உயர்ந்த தியாகங்கள் நிறைந்த புரட்சிகரப் போராட்டங்களால் தமது விடுதலையைத் தேடிக் கொண்டனர் விடுதலைப் போராட்ட காலத்தில் சோவியத் யூனியனும் அதனைச்சார்ந்த நாடுகளும் கம்போடிய மக்களுக்கு எதிராகவே செயல்பட்டு வந்தனர். ஆனால் உலகின் ஏராளமான நாடுகளும் மக்களும் குறிப்பாக சீன மக்களும் அரசும்- கட்சியும் தமது முழு ஆதரவையும் உதவியையும் கம்போடிய மக்களுக்கு அளித்தனர்.

கம்போச்சிய மக்கள் தமது நான்காவது தேசியதினத்தை நினைவுகூரும் இவ் வேளை மீண்டும் ஒரு விடுதலை யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். அன்று அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராடிய கம்போடிய மக்கள் இன்று வியட்னாம் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராடும் யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கின்றனர் நிச்சயம் கம்போச்சிய மக்கள் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அவர்களது கைப் பொம்மையான நொன் நோல்லுக்கும் வழங்கிய தீர்ப்பை வியட்னாம் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அவர்களது பொம்மையான ஹெங்சமறினுக்கும் வழங்கியே தீருவார்கள்.

**அடக்குமுறைகளை உடைத்தெறியப் புரட்சிகரப் போராட்டமே ஒரேவழி**

செம்பதாகை

SEMPATHAKAI — April

# இனஅடக்குமுறையை எதிர்க்கின்றோம் பிரிவினையை நிராகரிக்கின்றோம்

## பத்திரிகையாளர் மாநாட்டில் எமது தோழர்கள்

தமிழர் கூட்டணியால் முன்வைக்கப்படும் தமிழீழக் கொள்கையை நிராகரிக்கின்றோம். அதே வேளை, அரசாங்கத்தின் இனஅடக்குமுறையை வன்மையாக எதிர்க்கின்றோம். மேற்கண்டவாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது)யின் தலைமையிலான இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கத்தின் பிரதிநிதிகள் 25-3-78 சனிக்கிழமை காலை தென் இலங்கையில் இருந்து வந்த பத்திரிகையாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது கருத்துத்தெரிவித்தனர். யாழ் அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் பத்திரிகைநிருபர்கள்கேட்டபல தரப்பட்ட அரசியல் பொருளாதாரம்- சம்பந்தமான கேள்விகளுக்குப் எமது தோழர்கள் பதிலளித்தனர். மேற்படி கலந்துரையாடலின்போது தோழர்கள் கே. தணிகாசலம், வை. வன்னியசிங்கம், சோ. தேவராசா ஆகியோர் எமது பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர்.

தமிழர் கூட்டணியியால் முன் வைக்கப்படும் தமிழ் ஈழக் கோரிக்கை பிற்போக்கானது என்பதால் நாம அதை கண்டித்து நிராகரித்து வருகின்றோம். பிரிவினை சாதாரண தமிழ் தொழிலாள- விவசாய மற்றும உழைக்கும் மக்களுக்கு விமோசனம் தரும் கொள்கை அல்ல, இது தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி முழு நாட்டிற்கும் நாசம் விளைவிக்கக் கூடிய தொன்றாகும். பிரிவினையை நாம் எதிர்ப்பதால் தமிழ் மக்களுக்குப் பிரச்சினை இல்லை என்று கருதிவிடக் கூடாது. தமிழ் மக்கள் மொழி, கல்வி, பிரதேசம் ஆகியவற்றால் மோசமான அடக்கு முறைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை பிரிவினையை எதிர்க்கும் சாட்டில் எவரும் தட்டிக் கழித்து விட முடியாது. இன அடக்கு முறையை எமது இயக்கம் வன்மையாக கண்டித்து வருகின்றது.

இன அடக்கு முறையை இல்லாமல செய்வதற்கும் தமிழ் மக்களுடைய நியாயமான உரிமைகளை வென்றெடுப்பதற்கும் உண்மையான ஒரு புரட்சிகரப் போராட்டத்தைஎதிர்பார்த்தே நாம் வேலை செய்து வருகின்றோம். இத்தகைய போராட்டம் சிங்கள-தமிழ் மக்களின் மத்தியில் உள்ள புரட்சிகர சக்திகளினால் நிச்சயம் எதிர்காலத்தில் சாதிக்கமுடியும் என்று நாம திடமாக நம்புகின்றோம். தமிழ் மக்களாயினும் சரி அல்லது முழு நாட்டு மக்களாயினும் சரி தமது எதிர்காலத்தை தங்களுடைய சொந்தப் போராட்டங்களினால் தீர்மானிக்க வேண்டுமே தவிர வெளி நாடுகளின் தலையீடுகளை அனுமதிக்கக் கூடாது என்று கூறினர்.

மேலும் இன்றைய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை பற்றி நிருபர்களின் கேள்விகளுக்கு எமது தோழர்கள் பதிலளிக்கையில் இன்றைய பொருளாதாரக் கொள்கை முழு நாட்டு மக்களையும் மோசமாகப்பாதித்துள்ளது. உள்ளூர் உற்பத்தியாளர்களையும், உப உணவுச் செய்கையாளர்களையும் பாதித்துள்ளது. இதில் கூட இனவாதக் கண்ணோட்டம் இருப்பதாகவே நாம் கருதுகின்றோம் என்றும் கூறினர். சீரழிந்து செல்லும் அரசாங்கத்தின பொருளாதாரக் கொள்கையினால் முழு நாட்டு மக்களும் விரக்தியும் வெறுப்பும் அடைந்துள்ளனர். இதை அரசாங்கம் உணர்வதாலேயே பல அடக்கு முறைச் சட்டங்களை கொண்டு வந்துள்ளது. மேலும் பலசட்டங்களைக் கொண்டு வர முயற்சிக்கின்றது என்றும் கூறினர்.

அமிர்தலிங்கத்தின் இந்திய விஜயத்தின் போது பேசப்பட்ட பேச்சுக்களை பற்றி ஒரு நிருபர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த எமது தோழர்கள் அவ்வாறான பேச்சுக்கள் தவறானவை அவற்றை நாம் கண்டிக்கின்றோம் என்றும் கூறினர்.

## இனவாதம்

எமது நாட்டில் எதற்கெடுத்தாலும் இனவாதம பேசும் இழிநிலை வலுவடைந்து விட்டது. எந்தப் பிரச்சினையிலும் இனவாதக் கண்ணோட்டமும், இனவாத உணர்வுகளும் ஊட்டம் பெறுகின்றன. இனவாதம் நம நாட்டிற்கு ஒரு சாபக்கேடு என்று ஒரு இடத்தில் பேசும் அரசியல் தலைவர்கள் வேறொரு இடத்தில் கேவலமான முறையில் இனவாதம் பேசுகிறார்கள். எதிர்க்கட்சியில் உள்ளவர்களைப் பார்த்து இனவாதம் பேசி நாட்டைக் குழப்பத்திலை அழுககாதீர்கள என்று அரசின் தலைவர்கள் எச்சரிக்கை விடுகின்றனர் அதே வேளை அவர்களின் பக்கத்திலிருந்து கொண்டே மந்திரிகள் என்ற பட்டயத்தோடு இனவாதம் கக்கப்படுகின்றது. இனவாதம் பேசுவது இலங்கையில் ஒரு நாகரீகமாகி விட்டதா என்று கேட்கத்தான் தோன்றுகின்றது. அண்மையில் ருவிஸ்ட் நடனத்தில் உலக சாதனைகள் முறியடிக்கப்பட்டன என்று கூறப்பட்டது. ஒரு உலக சாதனை முறியடிக்கப்படும் போது கூட இலங்கையன் என்ற தேசிய உணர்வுக்குப் பதில் ''சிங்களமகன்'', ''தமிழ் மகன்'' என்ற குறுகிய இனவாதப் பேச்சுக்களைத்தான கேட்க முடிந்தது என்றால் எமது நாட்டைப் பற்றி வெளி உலகம் எவ்வாறு பார்க்கும். இதில் தங்களைப் பொறுப்பு வாய்ந்தவர்கள் என்று கூறிக் கொள்ளும் மந்திரிமார்களும், எம். பி. மாரகளும் பச்சையாக இன உணர்ச்சியைத் தூண்டி டுவிஸ்ட் ஆட்டக்காரர்களை உற்சாகப்படுத்தினார்கள் என்றால் அவர்களது பொறுப்பை எவ்வாறு மக்கள் அளவிடுவது. இன்று மக்கள் கூடும் சகல சந்து பொந்துகளிலும், இனவாதம எப்படியாவது நுழைந்து விடுகின்றது. இனவாதப் பேச்சுக்களை தடை செய்யச் சட்டம் கொண்டு வரப் போகின்றதாம் அரசாங்கம். இது வேடிக்கையாகவே உள்ளது. கள்ளர் குகைத் தலைவன் ஒருவன் கள்வர்களைப் பிடிக்கச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்று கேட்ட கதை போலத்தான் இருக்கின்றது. இனவாதத்தின ஊற்று மூலமான எமது நாட்டின் பொருளாதார சமூக அமைப்பு மாற்றப்படாத வரை, அவற்றைக் கட்டிக்காக்கும் முதலாளித்துவப் பாராளுமன்ற முறைகளும், நிர்வாகங்களும் மாற்றி அமைக்கப்படாத வரை, மொத்தத்தில் மனிதனை மனிதன் சுரண்டும் நிலை ஒழிக்கப்படாத வரை இனவாதத்தை ஒழிக்க முடியாது. இன்றைய அமைப்பில் எழுந்து வரும் பிரச்சினைகளைத் தீர்த்து மககளுக்கு வாழ்வு அளிக்க முடியாத சொத்துடைய ஆளும் வர்க்கங்களாலேயே இனவாதம் பேசப்படுகின்றது. தன் உண்மை நிலையை விளங்கிக் கொள்ளாததால் சாதாரண சிங்கள-தமிழ் மக்களும் இனவாதத்திற்குள் சிக்கித் தவிக்க நேரிடுகின்றது. எனவே இனவாதம் எமது சமூக அமைப்பின் சாபக்கேடு. அதை இல்லாதொழிக்க ஒரே வழி இன்றைய சமூக அமைப்பை மாற்றி அமைக்கும் போராட்டமே அன்றி வேறு மார்க்கம் இல்லை.

### சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஒரு வருடம் | ரூபா- | 7-50 |
| அரை வருடம் | ரூபா- | 3-50 |
| தனிப்பிரதி | சதம்- | 50 |

தொடர்பு
செம்பதாகை
15/1, மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்

ஆசிரியர் குழுவுக்கு கடிதம்

## உண்மைகள் உறங்குவதில்லை!

அன்புள்ள தோழர்களே!

செம்பதாகை பத்திரிகையின் பங்குனி மாத இதழ் படித்தேன். அவ் இதழில் ''சண்முகதாசன் என்ன பதில் கூறப் போகின்றார்?'' என்னும் தலைப்பில் வெளி வந்துள்ள விஷயம் சண்முகதாசனை சந்தியில் கொண்டு வந்து நிறுத்தியுள்ளதாகவே கருதுகின்றேன். சண்முகதாசன் தனது கடைசிக் காலத்தில் அல்பேனியத் தலைவர் அன்வர் ஹோசாவையே தனது கதாநாயகனாகக் கொண்டிருந்தார். அதே வேளை தலைவர் மாவோவையும் அவரது சிந்தனைகளையும் ஏற்றுக் கொள்பவர் போலவும் கூறி வந்தார். ஆனால் அன்வர் ஹோசா தலைவர் மாவோவிற்கு எதிராகக (தான் முன்பு தலைவர் மாவோவைப் பற்றிக் கூறியதையும் மறந்து) கோஷம் எழுப்பியுள்ளார். இதில் சண்முகதாசன் சந்தேகத்திற்கு இடமின்றி அன்வர் ஹோசாவின் நிலைப்பாட்டிற்கு வருவார் என்றே நான் நம்புகின்றேன்.

நான் திரு சண்முகதாசனின் பல அரசியல் வகுப்புகளுக்கு அவரது வீட்டுக்குச் சென்று வந்தவன். ஆரம்பத்தில் அவரது பேச்சு புரட்சிகரம் கொண்டதாகவும், ஆழ்ந்த தத்துவத் தன்மை உடையது போலவும் காட்டிக் கொடுக்கும். குறிப்பிட்ட காலம் சென்றதும் அவரது புரட்சிப் பேச்சு வெறும் வாய் வீச்சு என்பதும், தத்துவம் வெறும் வரட்டு வாதம் என்பதும் புலனாகி விடும். சண்முகதாசன் என்ன நிலைப்பாட்டை வகித்தாலும் எமக்குப் பரவாயில்லை. மாசேதுங் சிந்தனை ஒளியின் உண்மையான லட்சியவாதிகள் அணிவகுத்து முன்னேற வேண்டும் என்பதே என்போன்றவர்களின அவாவாகும்.

நான் ஒரு பல்கலைக் கழக மாணவன். எனது பெயரை தற்போது வெளியிட விரும்பவில்லை. ஏனெனில் சண்முகதாசனை ஒரு ''புரட்சிவாதியாக'' ''புரட்சிகர பூர்சுவாக'' நம்பும் சிலருடன் எனக்கு நட்பும் தொடர்பும் உண்டு. அத்தகைய நண்பர்கள் சண்முகதாசனின சுயரூபத்தைத் தெரிந்து கொள்ளும் வரை அவர்களுக்கு உதவி செய்வது எனது கடமை என்றே நம்புகின்றேன்.

செம்பதாகை தன் புரட்சிகரப் பணியைத் தொடர எனது வாழ்த்துக்கள் அதன் வளர்ச்சிக்கு ரூபா 10/- அனுப்பி வைத்துள்ளேன். ஏற்றுக் கொள்ளவும்.

கொழும்பு பல்கலைக் கழக மாணவன்

## நமது கலாச்சாரம் கப்பலேறுகிறன்து!

நமது நாட்டில் அந்நிய நடை உடை பாவனை நாளாந்தம் செல்வாக்குப் பெற்று வருகின்றது. அந்நிய மோகத்தால நமது இளம் சந்ததியினர் கவரப் பட்டு தமது எதிர்காலத்தையே பாழடிக்கும் விதத்தில் நடந்து கொள்கின்றனர். மேற்கத்தையப் பாணியிலான உடைகளும், நடை முறைகளும் பெரும் நாகரீகமாகக் கருதப்படுகின்றது. அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட கிப்பிகளின் வாழ்க்கை முறையைப் பின்பற்றி வாழும் இளைஞர்களும் நம் நாட்டில் நிறையக் காணப்படுகின்றனர். போதை வஸ்துக்களை தாராளமாகப் பாவிக்கும் முறைகளும், ஆபாசத் தனமான நடைமுறைகளும் இளைஞர்கள் மத்தியில் பரப்பப்பட்டு வருகின்றன. இதற்கு மேற்கத்தியப் படங்கள், சஞ்சிகைகள், தென் இந்திய குப்பை வெளியீடுகள் நம் நாட்டில் தாராளமாக இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப் படுகின்றன. இதனால் நம் நாட்டு நடை உடை பாவனை என்பன முற்றாக கைவிடப் பட்டு வருகின்றன. முக்கியமாகத் தலைநகரிலும் ஏனைய நகரங்களிலும் இச் சீரழிவைக் காணக் கூடியதாகவே உள்ளது.

உலகின் பல்வேறு நாடுகளில் பின்பற்றப்படும் நடை, உடை, பாவனை போன்றவை அந்தந்த நாடுகளின் மக்களுடைய வாழ்க்கை நிலைமைகளுக்கும், சீதோஷ்ண நிலைமைகளுக்கும், புவியியல் தன்மைகளுக்கும் ஏற்றவாறேமக்களால் பின்பற்றப்பட்டு வந்தன. இவை ஒவ்வொரு நாட்டின மக்களுடைய பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றின் தனித்துவத்தைப் பேணுபவையாகவும், வளர்ப்பவையாகவும் இருந்து வந்தன. அத்தகைய தனித்துவமான முற்றிலும் எமது நாட்டிற்குப் பொருந்தக் கூடிய நடை, உடை, பாவனைகளையே நாம் நமது நாட்டின் கலாச்சாரம் பண்பாடு என்று கூறி அவற்றைப் பின்பற்றி வந்தோம்.

இன்று சிங்களவர்களிலும் சரி தமிழர்களிலும் சரி நமது சொந்தக் கலாச்சாரத்தை நடை உடை பாவனையைப் பின்பற்ற பின் நிற்கும் நிலை மத்தியதர வர்க்கப் பிரிவினரிடையே மேலோங்கி வருவது விசனத்திற்குரியதாகும். மேல் தட்டு வர்க்கத்தினர் என்றோ அந்நிய கலாச்சாரத்தின் அடிமைகளாகி விட்டனர். அவர்களைப்பற்றி நமக்கு கவலையே இல்லை. ஆனால் மத்தியதர வர்க்கத்தினரின் இந்த அந்நிய மோகத்தின் தாக்கம் சாதாரண மக்களின் இளைஞர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற முனைவது கவலைக்குரியதேயாகும்.

சாதாரண மக்கள் மத்தியில் உள்ள இளைஞர்களின் கவனம் இத்தகைய அந்நிய கலாச்சார மோகத்தின் பக்கம் திரும்புவதால் தமது வர்க்க நிலையை தமது விடுதலையை, அல்லது ஆளும் வர்க்க கொடுமைகள் பற்றி அக்கறை அற்றவர்களாக இருக்கும்படி இளைஞர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். தாமும் வசதி படைத்தவர்கள் என்ற ஒரு போலி வாழ்வை நடாத்தி தன்னையும் சமுதாயத்தையும் ஏமாற்றும் நிலையையே இளைஞர்கள் பெறுவார்கள்.

எனவே திட்டமிட்டு நமது நாட்டு இளைஞர்கள் மீது அந்நிய கலாச்சார ஆதிக்கம் பரப்பப்படுகின்றது. அதை விரும்பி இளைஞர்கள் அரவணைக்க முயலுகிறார்கள். அதன் ஆபத்து இளைஞர்களுக்கு மட்டுமன்றி முழு நாட்டின் அரசியல் பொருளாதாரத்தை மாற்றுவதற்கான போராட்டங்களைத் திசை திருப்பவும் அல்லது மந்தப்படுத்தவும் மட்டுமே உதவும் என்பதை இளைஞர்கள் உணர்ந்து கொள்ளல் அவசியமாகும்

ஆர். லோகநாதன்
பருத்தித்துறை

மேலெழுந்தவாரியான அணுகுமுறைகளால் பிரச்சினைகளின் உண்மை நிலையை உணரமுடியாது!

# சீனாவின் எதிர்த்தாக்குதல்

# சோவியத்-வியட்நாம் ஆளும் கும்பல்களுக்கு

# பலத்த அடியாகும்

வியட்நாம் ஆளும் கும்பலின் ஆக்கிரமிப்பு வெறியையும், எல்லை மீறல் சம்பவங்களையும் நீண்ட காலமாகப் பொறுத்து வந்த சீன அரசும் மக்களும் கடந்த பெப்ரவரி 17ம் திகதி பலமான எதிர்த் தாக்குதலில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டனர். வியட்நாம் பிரதேசத்துக்குள் வியட்நாம் ஆக்கிரமிப்பாளர்களைத் தாக்கிச் சென்று பதிலடி கொடுப்பதில் சீன எல்லைப் படையினர் பல மைல்கள் முன்னேறிச் சென்றனர். வியட்நாமின் யுத்த தந்திரமிக்க கேந்திர நிலையங்களையும், அவர்களது ''விஷேசப் படைப்பிரிவுகளையும்'' தவிடு பொடியாக்கிய சீன மக்கள் விடுதலைச் சேனை வியட்நாமின் முக்கிய நகரமான லாங்சனையும் கைப்பற்றியது. சீனா பலமான இந்த எதிர்த்தாக்குதல் வியட்நாமின் ஆயுத அகங்காரத்திற்கும், ஆக்கிரமிப்பு வெறிக்கும் பலத்தபதிலடியாக அமைந்தது. இது வியட்நாமிற்கு மட்டுமன்றி அவர்களது எசமானர்களான சோவியத் சமூக ஏகாதிபத்தியவாதிகளுக்கும் பலத்த அடி என்பதே உலக மக்களின் அபிப்பிராயமாக உள்ளது.

இவ் எதிர்த் தாக்குதலை ஆரம்பித்த வேளை சீனா தனது நிலையை உலகிற்குத் தெளிவுபடுத்தியிருந்தது. [illegible] குறுதியின்படி கடந்த மார்ச் மாதம் 16ம் திகதியுடன் தனது சகல படைகளையும் வியட்நாமிலிருந்து திருப்பி அழைத்துள்ளது. இன்று ஒரு சீனப் போர் வீரராவது வியட்நாம் மண்ணில் இல்லை என்பதை உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது. சீனாவின் எதிர்த் தாக்குதலை ''சீன ஆக்கிரமிப்பு'' என்று சோவியத் யூனியனும் அதன் ஆதரவு நாடுகளும் கூக்குரல் இட்டன. ஆனால் உலகின் பெரும்பாலான நாடுகள் சீனாவின் நிலையைப் புரிந்து கொண்டதால் சோவியத்தின் சீன எதிர்ப்புப் பிரசாரத்திற்கு செவி மடுக்கவில்லை.

சீனா தனது வாக்குறுதியின் படி நடந்து கொண்டுள்ள அதே வேளை சோவியத்-வியட்நாம் ஆளும் கும்பல்கள் மேலும் கேவலமான முறையில் நடந்து கொள்வதை உலக நாடுகள் கண்ணெதிரே கண்டு வருகின்றன. கம்பூச்சியாவில் தயவு தாட்சணயமற்ற அடிகளை வியட்நாம் ஆக்கிரமிப்பாளர்கள் வாங்கி அழிவடைந்தும் வருகின்றனர். [illegible] அழிவையும் இழப்புகளையும் ஈடு செய்ய மேலும் பெருந்தொகையான வியட்நாம் துருப்புக்கள் கம்பூச்சியாவிற்குள் அனுப்பப்பட்டு வருகின்றன. இதே வேளை ஐ. நா. பாதுகாப்புச்சபையில் தென்கிழக்காசியா பற்றிய ஒரு தீர்மானம் பெரும்பான்மையுடன் நிறைவேற இருந்தது. அத் தீர்மானம் வியட்நாம் ஆக்கிரமிப்புக்கு பாதகமானதாக இருந்தபடியால் சோவியத் யூனியன் அத் தீர்மானத்தின் மீது தனது ரத்து அதிகாரத்தைப் பாவித்து அதைத்தடுத்து விட்டது. இது தென்கிழக்காசிய மக்களை மட்டுமன்றி முழு உலக மக்களையும் சோவியத் யூனியனின் சுயரூபத்தை மீண்டுமொரு முறை பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீன அரசினதும் மக்களினதும் சரியான நிலைப்பாட்டை உலக மக்கள் கண்டு அவர்களுக்கு பூரண ஆதரவை வழங்கி வருகின்றனர். இதைப் பொறுக்க முடியாத சோவியத்-வியட்நாம் ஆளும் கும்பல்கள் மேன் மேலும் சீன எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். சீனப்படையினர் பத்தாயிரம் பேர் இன்னும் வியட்நாமிற்குள் இருப்பதாகவும், இவர்கள் பதினாறு இடங்களில் தங்கியிருப்பதாகவும் ஒரு பெரும்பொய்மூட்டையை வியட்நாம் ஆளும் கும்பல் அவிழ்த்துவிட்டுள்ளது. இதைப் பற்றி பல உலகஸ்தாபனங்கள் ஆதாரத்தோடு வியட்நாமிடம் கேட்ட போது பதில் கூற முடியாது திண்டாடுகின்றனர். வியட்நாமில் சீனப் படையினர் இருந்தால் அப்பகுதிகளைப் பற்றிய விபரங்களை வெளியிட முடியாத நிலையில் தமது பொய்களை தாமே விழுங்கிக் கொள்ளும் நிலையிலேயே அவர்கள் உள்ளனர்.

இதே போல் ஏற்கனவே ஐம்பதினாயிரம் வியட்நாம் படைகள் லாவோசில் முகாமிட்டுள்ளன. தற்போது சீன-லாவோஸ் எல்லையில் பிரச்சினைகளை மூட்டி விடும் வேலையில் சோவியத்-வியட்நாம் கும்பல்கள் முயலுகின்றன. அதன் மூலம் மீண்டுமொருசீனஎதிர்ப்புப் பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விடலாம் என இவர்கள் எண்ணுகின்றனர். எவ்வளவு தான முயன்றாலும் உலக மக்களை ஒரு போதும் ஏமாற்ற முடியாது. முட்டாள்கள் கல்லைத் தூக்குவது முடிவில் தமது கால்களில் போட்டுக் கொள்ளவே என்பது போன்ற நிலைக்குத்தான் சோவியத்- வியட்நாம் ஆட்சியாளர்கள் வந்து முடிவார்கள்.

**ஒன்றுமேயில்லை!**

''குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. மின்சாரம் இல்லை. பணப் புழக்கம் இல்லை. சந்தை இல்லை. ஆஸ்பத்திரிகள் இல்லை. பாடசாலைகள் இல்லை. தொலைபேசித் தொடர்புகள் இல்லை. வியட்நாம் படைகளினால் சட்ட ஒழுங்கு எதையுமே செய்ய முடியவில்லை.'' இவ்வாறு ஒரு கம்யூனிஸ்ட் அல்லாத மேற்கு நாட்டு பத்திரிகை நிருபர் கம்போசியத் தலைநகரின் நிலைமையை வர்ணித்திருக்கின்றார் இந் நிலையில் தான் வியட்நாம் கைப் பொம்மையினர் கம்பூச்சியவில் தமது ''அரசாங்கத்தை'' நடத்துகிறார்கள்.

ஆதாரம்: பி. பி. சி வானொலி

# எம். ஜி. ஆரின் ஆட்சி புரட்சிவாதிகளை வேட்டையாடுகிறது!

இந்தியா முழுவதும் பல்லாயிரக்கணக்கான மாக்சிஸ்ட்-லெனிஸ்டுகள்- புரட்சிவாதிகள் நீண்டகாலமாகச் சிறையில் அடைக்கப்பட்டுவந்தனர். ஜனதா அரசாங்கம் பதவிக்கு வந்ததும் தமக்குத் தேவையானவர்களை சிறையிலிருந்து விடுவிக்க முடிவு செய்தது. அந்நேரம் புரட்சிவாதிகள்- மாக்சிஸ்ட்- லெனிஸ்டுகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்ற குரல் இந்திய மக்களிடையே வலுப்பெற்றது. அரசு தவிர்க்க முடியாது சிறையிலிருந்து குறிப்பிடத்தக்க பகுதியினரை வெளியில் விட்டது. தமிழ் நாட்டைப் பொறுத்தும் நிலைமை இவ்வாறே ஆனால் அண்மைக்காலங்களில் மீண்டும் இந்திய மாக்சிஸ்ட்-லெனினிஸ்டுகள் சிறைபிடிக்கப்பட்டு வருகின்றனர்.

தமிழ் நாட்டில் எம். ஜி. ஆர். ஆட்சி இந்த விஷயத்தில் மிகவும் மோசமாக நடந்து வருகின்றது. புரட்சிவாதிகள் நீதி கேட்ட குற்றத்திற்காக, தொழிலாளர்கள் சார்பாக கோரிக்கை வைத்தற்காக, விவசாயிகளின் போராட்டங்களை முன்னெடுத்தற்காக எம். ஜி. ஆர். ஆட்சியால் சிறைபிடிக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். அண்மையில் அவருடைய தொகுதியில் ஒரு பெண் உட்பட மூன்று விவசாயிகள் பொலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

எம். ஜி. ஆரைப் பதவிக்கு கொண்டுவந்தால் அவர் சினிமாவில் செய்த சகல நடவடிக்கைகளையும் தமது வாழ்க்கையிலும் செய்து மக்களை வாழவைப்பார் என தமிழ் நாட்டு மக்கள் நம்பினர், இன்று சினிமாவில் நடித்த அம்சங்களில் ஒன்றையாவது மக்களுக்குச் செய்ய முடியாத நிலையில் அவர் உள்ளார். இப்போது தான் மக்கள் சினிமா வேறு வாழ்க்கை வேறு என்ற உண்மையை தெரிந்துகொண்டுள்ளனர். இதனால் மக்கள் அதிருப்தி, வெறுப்பு, போராட்டங்கள் எனவெல்லாம் கிளம்பும் போது அவர்கள் மத்தியில் உள்ள புரட்சிகர சக்திகளான மாக்சிஸ்ட் லெனினிஸ்டுகளை சிறையில்அடைக்கும்வேலையை எம். ஜீ. ஆரும்-தமிழக அரசும் மிக மும்முரமாகச் செய்து வருகின்றனர். எவ்வளவுதான் சிறையில் அடைத்தாலும் தமிழ் நாட்டிலும்- முழு இந்தியாவிலும் வளர்ந்துவரும புரட்சிகர இயக்கத்தை எவராலும் தடுக்க முடியாது.

## தனக்கொரு நியாயம் பிறருக்கொருநியாயம்

# அல்பேனியாவின் பரிதாபநிலை

அல்பேனியத் தலைவர்கள் தங்களுக்கு ஒரு நியாயமும் மற்றவர்களுக்கு வேறொரு நியாயமும் பேசுவதில் வல்லவர்கள் என்பதை நிரூபித்து வருகிறார்கள். சீனாவின் சோஷலிச வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும், இந்த நூற்றாண்டின் முடிவுக்குள் சீனாவை ஒரு மிகுந்த சோஷலிச நாடாக்கவும் சீனக் கட்சியும்-அரசும்-மக்களும் தீர்மானித்து நான்கு துறைகளிலான நவீனமயப்படுத்தலை முன்னெடுத்து வருகின்றனர். அதற்காக வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடுகளிலிருந்து தொழில் நுட்பத்தை வாங்கவும் அதற்குப் பதிலாக அந்நாடுகளுடன் வர்த்தக- வியாபாரத் தொடர்புகளையும் சீனா மேற்கொண்டு வருகின்றது. இது சோஷலிச அடிப்படைக் கொள்கையான சுய சார்புக் கொள்கைக்கு உட்பட்டதாகவும், சோஷலிச வரம்புகளுக்கு உட்பட்டதாகவுமே செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அதே போல் பல்வேறு சமூக அமைப்புக்கள் கொண்ட நாடுகளுடன் ராஜதந்திரத் தொடர்புகளையும் வர்த்தக, கலாச்சாரத் தொடர்புகளையும் சீனா இன்று நேற்றல்ல கடந்த பல ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. சீனாவின் நிலை உலக நாடுகளுக்கும் மக்களுக்கும் தெளிவானதாகவே இருந்து வருகின்றது.

ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு உள்ளாக அல்பேனியத் தலைவர்கள் அர்த்தமற்ற அவதூறுகளையும்அபாண்டங்களையும் சீனா மீதும் அதன் சோஷலிச நிர்மாணத்தின்மீதும் சீனக் கட்சி மீதும், அதன் தலைவர்கள் மீதும் கக்கி வருகின்றனர். அதாவது சீனா முதலாளித்துவ நாடுகளோடு சங்கமமாகி விட்டது என்றும் ஏகாதிபத்திய நாடுகளோடு உறவாடுகின்றது என்றும், சீனத் தலைமை 'திரிபுவாதத் தலைமை'' என்றும் சீனா ஒரு ''சமூக ஏகாதிபத்திய நாடு'' என்றும் கூச்சலிட்டு வருகின்றனர்.

இத்தகைய கர்ணகடூர கூக்குரலை மேற்கொண்ட அல்பேனியத் தலைவர்கள் இன்று மேற்குநாடுகளை நோக்கி விரைவாக ஓடிக் கொண்டிருப்பது சிலரை ஆச்சரியத்துக்குள்ளாக்கியுள்ளது. அசல் முதலாளித்துவ நாடுகளுடன் வர்த்தக உறவுகளும், தொழில்நுட்ப உதவிகளும் பெறுவதற்கான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இத்தாலியோடு பெருமளவு வர்த்தக உடன்படிக்கையில் அல்பேனியா ஏற்கனவே ஈடுபட்டுள்ளது கிறீஸ் ஆட்சியினருடன் வர்த்தக கலாச்சார உறவு ஏற்படுத்தப்பட்டுள்ளது பிரான்சுடன் 79ம் ஆண்டிற்கான வர்த்தகம் பெருமளவு கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அதே போல் ஸ்கண்டநேவிய நாடுகளுடனும், பெல்ஜீயத்துடனும் வர்த்தக உறவுகள் வலுவடைந்துள்ளன. மேற்கு ஜேர்மனியில இருந்து நவீன யந்திரங்களை இறக்குமதி செய்வது பற்றி அல்பேனியா முடிவுக்கு வந்துள்ளது. இத்தகைய பாரிய யந்திரங்கள் பின் தங்கிய சமது பொருளாதாரத்தை வளம்படுத்த உதவும் என்று அல்பேனியத் தலைவர்கள் கூறுகின்றனர். இது மட்டுமல்ல அவர்கள் வசைபாடி வரும் யூகோஸ்லாவியாவுடன் வர்த்தக தொழில்நுட்ப உறவுகளை பெருக்கியுள்ளனர் சில மாதங்களுக்கு முன் யூகோஸ்லாவியாவின் தந்தித் தொலைபேசி தொடர்புகள் பற்றி ஒரு தூது கோஷ்டி அல்பேனியாவிற்கு சென்று அல்பேனியாவின் தந்தி தொலைபேசி நிலைமைகளை விருத்தி செய்வது பற்றி ஆராய்வுகளை நடத்தியது. இது மட்டுமன்றி கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் குறிப்பாகசோவியத் முகாமில் உள்ள பல்கேரியா, ஹங்கேரி, செக்கோஷ்லவேக்கியா, போலந்து போன்றவற்றுடன் நெருக்கமான வர்த்தகக் கலாச்சாரத் தொடர்புகளை வைத்துவருகின்றது. அண்மையில் கியூபாவுடன் பெருமளவிலான வர்த்தக உறவுகளுக்கான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டன.

இவற்றையெல்லாம் அல்பேனியா செய்து வருவதை பிழை என்று யாரும் கூறவில்லை. இத்தகைய நடைமுறைகளுக்கு விமர்சனம் கண்டனம் செய்தவர்கள் இதே அல்பேனியத் தலைவர்கள் தான என்பதை அவர்களே மறந்துவிட்டனர் போலும். அல்பேனியத் தலைவர்கள் கூறியவற்றை கிளிப்பிள்ளை போல் திருப்பி நம்மிடையே கூறிய அப்பாவிகள் சிலர் இன்று பரிதாபத்திற்குரியவர்களாக உள்ளனர்.

இன்று அல்பேனியா மேற்கொள்ளும் வர்த்த உறவுகளும், தொழில்நுட்ப ஒப்பந்தங்களும், யந்திர இறக்குமதியும் புரட்சிகரமானதாம். இதே வேலையை சீனா மேற் கொண்டால் அது திரிபுவாதமாம், தாங்கள் மேற் கொள்வது ராஜதந்திரமாம். அதே வேலையைச் சீனா செய்தால் அது பிற்போக்குத்தனமாம்.

இவ்வாறு தமக்கொருநியாயம் மற்றவருக்கொரு நியாயம் பேசவும் அல்பேனியத் தலைவர்களின் இரட்டை நிலைப்பாட்டால் அவர்களுக்கு எஞ்சியிருந்த அற்ப செற்ப ஆதரவும் உலகில் மங்கி வருகின்றது. இது தான் அதிதீவிரப் புரட்சி பேசுபவர்களின் கதி என்பதை சரித்திரம் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தி வருகின்றது.

**தாக்கும்நிலையில் உள்ள ஏகாதிபத்தியம் சோவியத் சமூகஏகாதிபத்தியமே!**

# தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றும் வங்கிக்கடன்!

பசுவதை எதிர்ப்புப் பிரச்சாரம் வேகமாகசெய்யப்பட்டு வருகிறது. பசு வளர்த்து தோட்டத் தொழிலாளர் பணம் சம்பாதித்து உயர்வு காணலாம் என கிராமிய சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் தொண்டமான் மேடை மேடையாய் சொற்பெருக்காற்றி வருகிறார்.

தான் மந்திரியான சில மாதங்களுக்குள் தோட்டத் தொழிலாளர்கள் பசு வாங்கி வளர்க்கவென்று வங்கிக் கடன் பெற வகை செய்து தந்து விட்டதாய் உச்சக் குரலில் பேசி வருகிறார் தொண்டமான்.

பலத்த சத்தத்தில், பல தடவை பேசி விட்டால் நடைமுறையில் நடப்பது மறைக்கப்பட்டு விடும் என்று அவர் நினைத்து விட்டார் போலும், வங்கியில் சென்று கடன் பெற வழி முறை கேட்டால், உங்கள் சம்பளத்திட்டத்துக்கு அது இயலாத ஒன்று என்று முகாமையாளர் 'உபதேசம்' செய்து அனுப்பி விடுவார்.

300 ரூபா முதலீடுசெய்து கடன் பெற்றுவிடலாம் என்று அறிந்து, இருந்த நகைநட்டெல்லாம் அடைவு வைத்து விட்டு, அத்தாட்சிக்குக் கையொப்பம் வாங்கத் துரைமாரிடமும், உயர் உத்தியோகத்திரிடமும் சென்றால் மறுப்புத்தான் கிடைக்கிறது. 20 அல்லது 22 நாள்தான் வேலை நாள் - இந்த இலட்சணத்தில் மாதா மாதம் காசு கட்ட முடியுமா என்ற கேள்வியைக் கேட்டு வைக்கிறார்கள்.

உண்மையில் மாதாமாதம் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்திற்குக் குறைந்தது 50 ரூபாவாகிலும் கடன் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். பெற்றுக்கொண்ட அரிசி, சீனி, மா, மற்றும் உணவுப் பொருட்கள் ஆகியவற்றுக்கான பெறுமதி போகக் கையில் எவ்வளவுக்குக் கடனுளி என்ற கணக்குத்தான் மிஞ்சுகிறது. இந் நிலையில் கடன் பத்திரத்தில் உறுதிப்படுத்திக்கையொப்பமிட யார்தான் முன்வருவார்கள்?

"தோட்டத் தொழிலாளர்களுக்கு உறுதியான, தொடரான சம்பளம்" என்ற கோரிக்கைக்குள் 'மாதச் சம்பளத் திட்டம்' என்றதொழிலாளரின் கோரிக்கையை மூழ்கடித்து விட்ட தொண்டமானின் கண்துடைப்புப் பேச்சுக்கான வெறும் துருப்புதான் பசு வாங்க வங்கிக் கடன் என்ற 'எட்டாப் பழம்'?

கடந்த காலத்தில் மாதச் சம்பளத் திட்டத்திற்காக பல போராட்டத்தை நடந்திய தோட்டத் தொழிலாளர்கள் 'எட்டாப் பழம்' எதுவும் எமக்கு வேண்டாம் நடைமுறைத் தீர்வுக்கு வழி வேண்டும் என்று குரல் கிளப்பி வருவதால் திணறடித்து நிற்கும் தொண்டமான் தன்னால் முடிந்த அளவு பலத்த சத்தத்தில் பேசித் தப்பப்பார்க்கிறார். அட்டனிலுள்ள உயர் கல்லூரி ஒன்றில் பேசிக் கொண்டிருந்த போது கூட்டத்திலிருந்தமாணவர்களின் கேலிக் குரலுக்கு மேலால் தன் கட்டுக்கதைகளை கட்டவிழ்த்து விட முடியாது தொண்டமான் திணறடித்து நின்றதைப் பார்க்க வேண்டுமே! தலவாக்கொல பகுதியிலுள்ள தோட்டமொன்றில் தொண்டமானின் வால்பிடிகள் கூட்டமொன்றை ஒழுங்குபடுத்தி, அதற்காக 'மாண்புமிகு அமைச்சர்' சமூகமளித்திருந்த போது- வெறும் கவர்ச்சிகரமான பேச்சை மட்டும் காலகாலமாய் கேட்டுச் சலித்த தொழிலாளரைக் காணாது திகைத்துப் போய் அமைச்சர் தம்மைப் பார்த்து நிற்பதைச் சகிக்காது தலைகுனிந்து நின்றனர். பாவம் 'தொழிலாளர் தலைவர்' தொண்டமான் இன்னும் பழைய தொழிலாளர்களைப் பார்க்கலாம் என்று நினைத்திருக்கிறார் போலும்.

## சோவியத் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

இந்தியத் தலைநகரான டெல்கியில் உள்ள சோவியத் தூதுவராலயத்தின் முன் 2,000யிரத்திற்குமதிகமான மக்கள் சோவியத் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். கடந்த மாதம் 26ம் திகதி நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் ''ரஷ்ய ஏகாதிபத்தியம் ஒழிக'', ''வியட்னும் விஸ்தரிப்புவாதம் ஒழிக!'', 'ரஷ்ய ஏகாதிபத்தியவாதிகளே இந்தியாவில்- தலையிடாதீர்கள்'' போன்ற சுலோகங்கள் மக்களால் எடுக்கப்பட்டன. ஆர்ப்பாட்டம் நடத்திய மக்கள் மத்தியில் இந்திய மாக்சிஸ்ட்- லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சத்தியநாரயணன்சிங் உரையாற்றினர். அவர் தனது உரையில் சோவியத்- வியட்னும் ஆக்கிரமிப்பு ஆளும் கும்பல்களின் மேலாதிக்க வெறித்திட்டங்களை அம்பலப்படுத்தினர். ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் பெருந் தொகையான சோவியத்-வியட்னும் எதிர்ப்பு துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.


மாக்சிச-லெனினிச-மாசேதுங் சிந்தனை நூல்கள் மற்றும் சீன வெளியீடுகளைப் பெற தொடர்பு கொள்ளுங்கள்.

**வசந்தம் புத்தக நிலையம்**
முனீஸ்வரன் வீதி
யாழ்ப்பாணம்

தொடர்ந்து படியுங்கள்

**Red Banner**

தொடர்பு கொள்ளுங்கள்

Red Banner
15/1, Power House Road,
Jaffna.


## தனியார் பஸ்சேவை இ.போ.ச.வை விழுங்குமா?

இம் மாதம் 10ம் திகதி முதல் தனியார் பஸ் சேவை நடத்த பஸ் முதலாளிகளுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இச்சேவை இ.போ.சவிற்குப் போட்டியாகவே அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இச் சேவையை அரசாங்கம் கட்டுப்படுத்துவது போன்ற சட்ட திட்டங்களை வெளிப்படுத்தியுள்ளது. இது உடனடியாக மக்கள் மத்தியில் ஒரு சாந்தத்தை ஏற்படுத்துவதற்காகவே தான். படிப்படியாக இந்த தனியார் பஸ் சேவை இ. போ. ச. என்ற அரசாங்க அமைப்பையே விழுங்கி விடுமா என்ற அச்சம் தோன்றியுள்ளது.

கடந்த காலத்தில் தேசியமாக்கப்பட்ட பல துறைகள் இன்று வெவ்வேறு போர்வைகளில் மீண்டும் தனியார் துறைக்கு மாற்றப்பட்டுள்ளன. இன்று இ.போ.ச வும் படிப்படியாகத் தனியார் துறைக்கு கொண்டு வரும் நோக்குடனயே தனியார் பஸ் சேவை அனுமதிக்கப்பட்டு அதன் பலாபலன்கள் பிரசாரப்படுத்தப்படுகின்றன. இ. போ. சவிற்கு கூடிய பஸ்களை இறக்குமதி செய்து அதன நிர்வாகத்தை சீர்படுத்தி மக்களுக்கு திருப்திஅளிக்கக் கூடிய பஸ் சேவையை நடத்த முடியும். அதைச் செய்ய முடியாத ஆட்சி தனது வர்க்கத்தைச் சேர்ந்த பெரும் முதலாளிகள் போககுவரத்துத் துறை மூலம் பெரும் லாபத்தைப் பெற்றுக் கொள்ள மற்றொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இ. போ. சாவின் சீர்கெட்ட நிலையால் வெறுப்புற்ற மக்கள் தனியார் பஸ் சேவை தேவைதான் என்று தற்போது கூற முற்படுகிறார்கள். ஆனல் அதன் மோசமான விளைவுகள் உடனடியாக அல்ல நீண்ட காலத்தில் தான் பிரயாணிகளான மக்களையும், தொழிலாளர்களையும் நிச்சயம் பாதிக்கும். இறுதியில் இ. போ. ச. இத் தனியார் பஸ் சேவையால் விழுங்கப்பட்டு விடும்.

(1-ம் பக்கத்தொடர்ச்சி

முள் ஒருவரை ஒருவர் முட்டி மோதிக்கொள்வது இயல்பானதேயாகும். இவர்களது மோதல்களின் வெளிப்பாடு உடனடியாக இல்லாவிடினும் சிறிது கால சென்றுபது மக்கள் முன் அம்பலத்திற்கு வந்தே தீரும்.

## வடபகுதிக்கு விஷேச சட்டமா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கொலை-கொள்ளைச் சம்பவங்களுக்கு அரசியல்நோக்கமோ பின்னணியோ இல்லைஎன்று கூறியிருக்கிறார்கள். நிலைமைஇப்படி இருக்க வடபகுதிக்கு விஷேச சட்டம் என்பது அர்த்தமற்ற தொன்றாகவே இருக்கும்.

நாடு முழுவதிலும் கொள்ளை-கொலைச் சம்பவங்கள் தாராளமாக இடம் பெறுகின்றன. அவற்றின் ஒரு பகுதியாகவே வட பகுதியிலும் நடைபெறுகின்றன. இதை நமது நாட்டின் தீர்க்க முடியாத பிரச்சினைகளால் விரக்தி, வேதனை, இல்லாமை வெறுப்பு ஆகியவற்றின் வெளிப்பாடாகவே கருத முடியும். அத்துடன் விரக்தியுற்ற இளைஞர்கள் தமது தேவைகளை எப்படிக் குறுக்கு வழிகளில் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்பதைக் கற்றுக் கொடுக்கும் சினிமாவும், சஞ்சிகைகளும் நம் நாட்டில் அரசாங்க ஆதரவோடு பரப்பப்படுகின்றது. இந் நிலையில் நாடு முழுவதிலும் நடப்பது போல் வட பகுதியிலும் நடைபெறவே செய்கின்றன. இப்படிக் கூறுவதால் நாம் வன்செயல்களையோ அல்லது கொள்ளை கொலைச் சம்பவங்களை ஆதரிக்கின்றோம் என்பதல்ல அர்த்தம். நாம் எப்பொழுதும் தனி நபர் பயங்கரவாதத்தையும் அது மக்களின் உண்மையான விடுதலைப் பாதைக்கு விளைவிக்கும் நஷ்டத்தைப் பற்றியும் கண்டித்து வந்திருக்கின்றோம். இவ்வித தனி நபர் பயங்கரவாத வன்செயல்களை நாம்கண்டித்து நிராகரிக்கின்றோம். அதே வேளை இவ்விதமான நிலைமைகள் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணங்களாக அமைந்த சமூக அடித்தளத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திவிட வேண்டுமென்றேகோருகின்றோம். எனவே மக்களை- இளைஞர்களை விரக்திக்கும், வேதனைக்கும், கொடுமைகளுக்கும், இன அடக்குமுறைகளுக்கும் உள்ளாக்கும் பிரச்சினைகளை ஓரளவு தானும் குறைப்பதற்கான முயற்சிகளை மேற் கொள்வதற்குப் பதிலாகச் சட்டங்களைக் கொண்டு வருவதால் எந்தப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியாது என்பதே எமது கருத்தாகும்.

வட பகுதிக்கென அரசாங்கம் விஷேச சட்டம் கொண்டு வந்தால் அது ஏற்கனவே இன அடக்குமுறைகளால் நொந்து போய் விரக்திக்கும், வேதனைக்கும் உள்ளாகி இருக்கும் மக்கள் மத்தியில் மேலும் அடக்குமுறைகளைத் திணிப்பதாகவே இருக்கும். இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாகவே அமையும். அதுமட்டுமன்றி பிரிவினையை விரும்பாத பெரும்பாலான தமிழ் மக்களையும் பிரிவினையின் பக்கம் தள்ளி விட உதவி செய்வதாகவே இருக்கும். அதனால் பல வழிகளில் செல்வாக்கு இழந்து வரும் கூட்டணித் தலைமையின் கரங்களைப் பலப்படுத்த மட்டுமே அவ் விஷேச சட்டம் உதவி செய்யுமே தவிர பிரச்சினைகளை தீர்க்க உதவாது என்றே நாம் கருதுகின்றோம். அத்துடன் வட பகுதி மக்களையும்- தமிழ் மக்களையும் தேசிய வாழ்வில் இருந்து ஒதுங்குவதற்கு அல்லது ஒதுக்கி விடுவதாகவே இருக்கும். எனவே தேசிய நன்மை கருதி, நாட்டு மக்கள் மத்தியில் ஓரளவு தானும் ஒருமைப்பாட்டை பாதுகாக்க வேண்டுமாயின் உத்தேசித்திருக்கும் வட பகுதிக்கு விஷேச சட்டம் என்பதை அரசாங்கம் கை விட வேண்டும். இதைச் சகலபுரட்சிகர- முற்போக்கு- தேசபக்த- ஜனநாயக சக்திகள் ஒரே குரலில் அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும் எனக் கோருகின்றோம்.

## அரசியல் பழிவாங்கலே பூட்டோவின் கொலை

பாகிஸ்தானின் முன்னுள் பிரதமர் ஜனப் அலி பூட்டோ இம் மாத முற்பகுதியில் தூக்கில் இடப்பட்டார். ஜனப் பூட்டோவிற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதும் அவருக்கு மன்னிப்பு அளிக்கும்படி உலக நாடுகளின் தலைவர்கள் பாகிஸ்தான் ராணுவ சட்ட நிர்வாகியான ஷியா உல் ஹக் இடம் கோரிக்கை விடுத்தனர். அதே போல உலக மக்களும் பூட்டோவுக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என்ற அபிப்பிராயத்தையே கொண்டிருந்தனர் உலக மக்களினதும்- உலக நாட்டு தலைவர்களினதும் நியாயமான கோரிக்கைகளை எல்லாம் உதாசீனம் செய்து விட்டு பாகிஸ்தான் ராணுவ ஆட்சியினர் பூட்டோவை ஒழித்துக்கட்டியுள்ளனர். பூட்டோ தூக்கிலடப்பட்டது ஒரு அரசியல் பழிவாங்கல் என்றே கூற வேண்டும். சட்டம், விசாரணை, நீதிமன்றம் என்பவற்றை விட உண்மையான அரசியல் அதிகாரம் எங்கு தங்கி இருக்கின்றது? அது துப்பாக்கிக் குழலில் இருந்து தான் பிறக்கிறது என்பதை பாகிஸ்தானின் ராணுவ ஆட்சியினர் உலகிற்கு அப்பட்டமாகவே வெளிப்படுத்தியுள்ளனர்.

ஜனப் பூட்டோ பாகிஸ்தானை சொந்தக் கால்களில் எழுந்து நிற்கச் செய்ய வேண்டும் என்பதிலும், அந்நியத் தலையீடுகளோ, வல்லரசுச் செல்வாக்கோ அற்ற ஒரு பாகிஸ்தானைக் கட்டி எழுப்ப வேண்டும் என்பதிலும் உறுதியானவராக இருந்தார். அதற்கான முயற்சிகளையும் தனது பதவிக்காலத்தில் வகுத்தார். அதனாலேயே அவர் மூன்றும் உலகம் என்ற குரலை ஓங்கி ஒலித்தார். இதனால் அவர் உலக அரங்கில் ஒரு முற்போக்குப் பாத்திரத்தை வகித்தார். பூட்டோ பாகிஸ்தானில் இருந்துவங்காளதேசம் பிரிந்த போதும் அதற்குப் பின்பும் எடுத்த நடவடிக்கைகளின் மூலம் தான் ஒரு சிறந்த ராஜதந்திரி என்பதை நிரூபித்தார். ஜனப் பூட்டோ ஒரு சிறந்த ராஜ தந்திரி மட்டுமல்ல ஒரு சிறந்த தேசியவாதியுமாவார். பூட்டோ போன்ற ஒரு தேசியவாதிக்கு ஏற்பட்ட துயரச் சம்பவம் முற்போக்கு எண்ணம் படைத்த சகலராலும் கண்டிக்கப்பட வேண்டியதேயாகும்.

அச்சுப்பதிப்பு: யாழ்ப்பாண அச்சகம் 93, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். வெளியீடுபவர்: சி. நவரத்தினம் 15/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்.